1967 ஜூலை 14]

தொழில் நிறுவனக் குழுக்கள்

* **344 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா— **மூற் பகல் 10–30**

(அ) நமது ராஜ்யத்தில் எந்தெந்த தொழிற்சாலைகளில் முதலாளி, தொழிற்சங்கம், சர்க்கார் ஆகியவர்களின் பிரதிநிதிகளைக்கொண்ட கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன ?

(இ) எந்த ஆண்டு முதல் இவைகள் அமைக்கப்பட்டன ?

(உ) அவற்றின் பணிமுறைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இம்மாநிலத்தில் உள்ள தொழில் நிறுவனங்களில் செயல்பட்டு வரும் எந்தக் குழுக்களிலும் அரசாங்கப் பிரதிநிதிகள் இல்லை. பணிக்குழுக்கள், குறை கவனிப்புக் குழுக்கள் என்பவை போன்ற அந்த நிறுவனக் குழுக்களில் அத் தொழில் நிறுவன பிரதிநிதிகளும் நிர்வாகத்தினரின் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் மட்டுமே இடம் பெற்றுள்ளனர்.

(இ), & (உ) இக்கேள்விகள் எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இனிமேலாவது அதுபோன்று அமைப்பதற்கான உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அவர்களது நிர்வாகம் சம்பந்தப்பட்ட குழுக்கள் இருக்கின்றன. அவற்றில் அரசாங்கம் தலையிடுவதில்லை. தொழிலாளர்கள், நிர்வாகஸ்தர்கள், அரசாங்கம் ஆகிய மூவரும் சேர்ந்த குழுக்கள் தனியாக இருக்கின்றன. அதில் மட்டும் அரசாங்கம் பங்குபெறும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உள்ள ஒரு தொழில் ஸ்தாபனத்தில் தொழிலாளரும், முதலாளியும் சேர்ந்த ஒரு குழு இருக்கிறது. அது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதுரை மாவட்டத்தில் அநேக தொழில் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. பல குழுக்களும் இருக்கின்றன. க்ரீவன்ஸ் கமிட்டி, வொர்க்ஸ் கமிட்டி என்பதாக எல்லாம் இருக்கின்றன. எந்த தொழில் ஸ்தாபனத்தில் உள்ள குழுவைப் பற்றி கனம் அங்கத்தினர் கேட்கிறார் என்பது தெரிந்தால் பதில் சொல்ல முடியும்.

தொழிலாளர்களுக்கு வீடுகள்

* **345 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

மில், பொதுப்பணித்துறை, நகரசபை இவைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீடுகட்டிக்கொடுக்க எத்தனை விதமான திட்டங்கள் உள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உதவித் தொகையுடன் கூடிய தொழிலாளர் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் தொழிற்சாலைத் தொழிலாளர்கட்கு வீட்டுவசதி செய்து கொடுக்கப்படுகிறது. பாளையங்கோட்டை, சிறப்புச் சிறுபாசனத் திட்டக் கோட்டத்தில் பணிபுரியும் பொதுப்பணித் துறை பணியாளர்கட்கும் குடியிருப்புகள் வகை செய்வதற்கான ஒரு திட்டத்தை தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) செயல்படுத்தி வருகிறார். நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு ஊழியர்களுக்கான சிறப்பு வீட்டுவசதி திட்டத்தை நகராட்சிகளின் ஆய்வாளர் செயல்படுத்தி வருகிறார். நகராட்சி மன்றங்கள் குறைந்த வருமானத் தொகுதியினர்க்கான வீட்டுவசதி திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டி, அவற்றில் குறிப்பிட்ட சதவீதமுள்ள வீடுகளைத் தங்களது ஊழியர்களுக்கு ஒதுக்கித் தரலாம்.